### தமிழ்நாட்டின் இயற்கை பாரம்பரியத்தையும்

# மக்களின் வாழ்வாதாரத்தையும் முதல்வர் பாதுகாத்து வருகிறார்!

## மக்களவையில் வேலூர் – கதிர் ஆனந்த் எம்.பி. பேச்சு!



புதுடெல்லி,மார்ச்.17- எண்ணெய் வயல்கள் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதா-2024 மீதான விவாதத்தில் திமுகவின் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்பி கதிர் ஆனந்த் கலந்து கொண்டு பேசியதாவது.

எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வுக்கான நமது ஒழுங்குமுறை கட்டமைப்பை நவீனமயமாக்குவதற்கான ஒரு சரியான நேரத்தில் மற்றும் மாற்றத்தக்க நடவடிக்கையாக இந்த மசோதா உள்ளது. இருப்பினும்- நாம் முன்னேற்றத்தை ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில்- இயற்கை வள பிரித்தெடுப் பின் பிராந்திய மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் தாக்கங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நிலக்கரி படுக்கை மீத்தேன்- ஷேல் எரிவாயு மற்றும் ஷேல் எண்ணெய் போன்ற இயற்கையாக நிகழும் ஹைட்ரோகார்பன்களை உள்ளடக்கிய கனிம எண்ணெய்களின் வரையறையை இது விரிவுபடுத்துகிறது. இந்த விரிவாக்கம் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் ஒத்துப்போகிறது மற்றும் முன்னர் பயன்படுத்தப்படாத பகுதிகளில் புதுமைகளை ஊக்குவிக்கிறது. இந்த மசோதா காலாவதியான சுரங்க குத்தகையை மிகவும் விரிவான பெட்ரோலிய குத்தகை யுடன் மாற்றுகிறது- இது எங்கள் விதிமுறைகள் தொழில்துறையின் வளர்ந்து வரும் தன்மையை பிரதிபலிக்கிறது என்பதை உறுதி செய்கிறது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு!**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு- கார்பன் உமிழ்வு குறைப்பு மற்றும் கனிம எண்ணெய்களைப் பாதுகாத்தல் போன்ற முக்கிய மான விஷயங்களில் விதிகளை உருவாக்க ஒன்றிய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. கூடுதலாக- இது சட்டத்தின் சில விதிகளை குற்றமற்றதாக்குகிறது- வணிக நட்பு சூழலை வளர்ப்பதற்கான ஒரு தீர்ப்பு பொறிமுறையுடன் குற்றவியல் தண்டனைகளை மாற்றுகிறது. இந்த மாற்றங்கள் நிலையான மற்றும் திறமையான வள மேலாண்மையை நோக்கிய ஒரு முன்னு தாரண மாற்றத்தைக் குறிக்கின்றன.

இருப்பினும்- இந்த நன்மைகளுடன்- தமிழ்நாட்டில் டங்ஸ்டன் சுரங்கம் மற்றும் ஹைட்ரோகார்பன் எடுப்பது போன்ற அழுத்தமான பிரச்சினை களையும் நாம் கவனிக்க வேண்டும்.

**டங்ஸ்டன் சுரங்கம்!**

டங்ஸ்டன் சுரங்கத்திற்கான முன்மொழியப்பட்ட தளமான மதுரையின் பல்லுயிர் நிறைந்த மேலூர் பகுதி- உள்ளூர் சமூகங்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பை எதிர்கொள்கிறது. அரிய தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் தாயகமான இந்தப் பகுதி- பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது- மேலும் இங்குள்ள எந்தவொரு சுரங்க நடவடிக்கையும் சரிசெய்ய முடியாத சுற்றுச்சூழல் சேதத்தை ஏற்படுத்தக்கூடும்.

இதேபோல்- பல்லுயிர் பெருக்க இடமான மன்னார் வளைகுடாவில் முன்மொழியப்பட்ட ஹைட்ரோகார்பன் சுரங்கத் திட்டங்கள்- உடையக்கூடிய சுற்றுச்சூழல் அமைப்புகள்- கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் நமது கடலோர சமூகங்களின் வாழ்வாதாரங்களுக்கு கடுமையான ஆபத்தை ஏற்படுத்தவல்லது என்பதால் இந்தத் திட்டங்களைத் தொடங்குவதற்கு முன் தமிழக அரசுடன் முன்கூட்டியே கலந்தாலோசிக்காதது கவலையும் வேதனையும் அளித்துள்ளது..

இந்தச் சூழலில்- இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நமது தமிழக முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் ஆற்றிய முக்கிய பங்கை நான் பாராட்ட வேண்டும். மாநிலத்தின் இயற்கை பாரம்பரியத்தையும் அதன் மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பதில் அவரது முன்னோடித் தலைமையும்- அசைக்க முடியாத அர்ப்பணிப்பும் முன்மாதிரியாக உள்ளன. நமது முதல்வர் ஸ்டாலின் அவர்கள் இந்தத் திட்டங்களுக்கு தொடர்ந்து தனது எதிர்ப்பைக் குரல் கொடுத்து வருகிறார்- இதில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் சமூகபொருளாதார அபாயங்களை வலியுறுத்துகிறார். இந்த முயற்சிகளை நிறுத்தி -தமிழ்நாட்டின் பலவீனமான சுற்றுச்சூழல் அமைப்பில் அவற்றின் தாக்கத்தை மறுபரிசீலனை செய்யுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி பிரதமருக்கு அவர் கடிதம் எழுதினார். தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றுவதும்- உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்வதும் அவரது முயற்சிகளில் அடங்கும்.

சமச்சீரான- வெளிப்படையான முடிவெடுப் பதை உறுதி செய்வதற்காக அமைச்சகத்திற்கு சில பரிந்துரைகள் என்னிடம் உள்ளன. கட்டாய மாநில ஒருமித்த கருத்துக்கு- சுரங்க ஆய்வுத் திட்டங்களைத் தொடங்குவதற்கு முன் மாநில அரசிடமிருந்து வெளிப்படையான ஆட்சேபனை யில்லாச் சான்றிதழ் வழங்கத் தேவைப்படும் ஒரு சட்ட கட்டமைப்பை நிறுவ வேண்டும்.

இது மாநிலங்கள் தங்கள் பிராந்தியங்களை பாதிக்கும் திட்டங்களை அங்கீகரிப்பதில் தீர்க்கமான பங்கைக் கொண்டிருப்பதை உறுதி செய்யும். இது அமைச்சகத்திற்கு நான் வழங்க விரும்பும் மிக முக்கியமான பரிந்துரை. ஒரு வெளிப்படையான செயல்முறைக்கு- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள் மற்றும் சமூகக் கருத்துகள் உட்பட அனைத்து திட்ட விவரங்களையும் மாநில அதிகாரிகள் பொது மக்களுக்கு அணுகக்கூடியதாக மாற்ற வேண்டும்.

பல்லுயிர் நிறைந்த பகுதிகளை விலக்க திட்ட எல்லைகளை மறுவரையறை செய்வதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்புகளை வலுப்படுத்த வேண்டும் மற்றும் சுற்றுச்சூழல் சேதத்தைத் தடுக்க கடுமையான சுற்றுச்சூழல் விதிமுறைகளை செயல்படுத்த வேண்டும். சமூக ஈடுபாடு கொண்ட உள்ளூர் சமூகங்களை அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கும் அவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்கும் முடிவெடுக்கும் செயல்பாட்டில் தீவிரமாக ஈடுபடுத்துவதை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

சுயாதீன மேற்பார்வைக்காக- சுரங்கத் திட்டங்களை மேற்பார்வையிட ஒரு சுயாதீன ஒழுங்குமுறை அமைப்பை நிறுவ வேண்டும்- இது மாநில பங்களிப்புடன் சுற்றுச் சூழல் மற்றும் சமூக விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்கிறது.

இந்த மசோதாவும் அதில் உள்ள சிக்கல்களும் நமது முன்னேற்றத்திற்கான பாதை உள்ளடக்கியதாகவும் பொறுப்பானதாகவும் இருக்க வேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. பொருளாதார வளர்ச்சியை இயக்க நமது இயற்கை வளங்களின் திறனை நாம் பயன்படுத்தும் அதே வேளையில்- சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும்- அதைச் சார்ந்திருக்கும் சமூகங்களை மேம்படுத்தவும் வேண்டும்.

எனவே- வளர்ச்சி வெளிப்படைத்தன்மை மற்றும் நிலைத்தன்மை ஆகியவை கைகோர்த்துச் செல்லும் எதிர்காலத்தை உருவாக்க நாம் பாடுபடுவோம்.

மேற்கண்ட பரிசீலனைகளைக் கருத்தில் கொண்டு- நியாயமான- வெளிப்படையான மற்றும் தொலைநோக்கு சிந்தனை கொண்ட ஒரு தொழில்துறை மேம்பாட்டு அணுகுமுறையை ஆதரிப்பதில் என்னுடன் இணையுமாறு மத்திய அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கதிர் ஆனந்த் பேசினார்.




தேனி பெரியகுளம் தெற்கு ஒன்றியம் சார்பாக தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் பி.டி.செல்லபாண்டியன் தலைமையில் எல்.எம்.பாண்டி, வரவேற்புரையில் செந்தில் முருகன்.நாகஜோதி அருணாசலம், திருகண்ணன், சுரேஷ், பாஸ்கர பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. எல்.மூக்கையா, சரவணகுமார் எம்.எல்.ஏ., சௌமியன் வைத்தியநாதன், ஆலடிசெல்வராஜ், முத்துராமலிங்கம், நேரு பாண்டியன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். ராஜன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திலீப் அழகிரி

**மார்ச் 17 (2013)**



**திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவரான பட்டுக்கோட்டை அழகிரியின் புதல்வரான இவர், தி.மு.க.வின் துவக்கக் கால உறுப்பினர்.**

**1965ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று சிறை தண்டனை பெற்றவர்.**

**பத்திரிகையாளராகவும், மொழிப்போர் தியாகிகள் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்ததோடு, கழகப் பணியும் – சமுதாயப் பணியும் திறம்பட ஆற்றி ஏழை, எளிய மக்களுக்கு அருந்தொண்டாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



அரகண்டநல்லூர் பேரூராட்சி மன்றத் தலைவரும், விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளருமான வழக்கறிஞர் எஸ். அன்பு அவர்களின் தந்தை, முன்னாள் பேரூராட்சி மன்ற துணை தலைவர், முன்னாள் நகரச் செயலாளர் மறைந்த டி.சடையாண்டி அவர்கள் உடலுக்கு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, திருமதி விசாலாட்சி பொன்முடி ஆகியோர் அஞ்சலி செலுத்தி பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர். மாவட்ட துணைச் செயலோளர் டி.என்.முருகன், ஒன்றியச் செயலாளர் அ.சா.ஏ.பிரபு உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

# ஒன்றியம் என்பதை மறந்து போன பா.ஜ.க.!

இந்திய அரசமைப்பின் முகப்புரை பொருளியல் நீதிக்கும் அரசியல் நீதிக்கும் முன்னதாக சமூக நீதியை தான் முதன்மைப்படுத்துகிறது. இது மதவாதம் என்ற சிறிய வட்டத்தில் சுழன்று கொண்டிருக்கும் பாரதிய ஜனதாவுக்கு தெரிய வாய்ப்பில்லை. அரசமைப்பு இயற்றப்பட்ட போது பழங்குடியினருக்கும் பட்டியல் இனத்தவருக்கும் சமூக நீதி உறுதிப்படுத்தப்பட்டது. தீண்டாமை கூடாது என்பதோடு மட்டுமின்றி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை அரசமைப்பு நிலை நாட்டியது அனைவருக்கும் சம நீதி என்பது தான் சமூக நீதியின் அடிப்படை தத்துவம் என்பதை பாஜக இன்னும் தெரிந்து கொள்ள வில்லை.

இந்தியாவில் 1950-ஆம் ஆண்டு ஜனவரி 26-இல் அமலுக்கு வந்த அரசமைப்பு கூட்டாட்சிக்கான வரையறை என்று சொல்ல முடியாது. மாறாக மாநிலங்களை விட மத்திய அரசுக்கு அதிக அதிகாரம் பொறுப்பு இருக்குமாறு வகுக்கப்பட்டது. இதற்கு அப்போது சொல்லப்பட்ட காரணம் வலுவான மத்திய அரசு அமைய வேண்டும் என்பதுதான். அதற்கு அவர்கள் சொன்ன உதாரணம் இந்தியாவில் வலுவான ஆட்சி அமைப்பு இல்லாததால் தான் ஆங்கிலேயர் அதிகாரம் செய்ய நுழைந்தார்கள் என்பது. அப்போது நிலையான ஆட்சி என்பது தான் பேசும் பொருளாக இருந்தது. ஒரு கட்டத்தில் மாநிலங்களை மத்திய அரசு புறக்கணிக்கிறது பாரபட்சம் பார்க்கிறது என்பது சமூக நீதியை கொள்கையாகக் கொண்ட திமுகவுக்கு தெரியும் போது தான் ஆட்சி அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற குரலை தொடர்ந்து எழுப்பத் தொடங்கினார்கள். அப்பொழுது காங்கிரஸ் கட்சி அதிகாரம் செய்ய வேண்டும் என்பதற்காக நாங்கள் அதிகாரம் கேட்கவில்லை மக்களுக்கு சேவை செய்ய தான் அதிகாரம் கேட்கிறோம் என்று அதற்கு காரணங்களை சொல்ல தொடங்கி இருந்தார்கள்.



**எஸ். ரகுபதி**
**சட்ட அமைச்சர்**

மொழி அடிப்படையில் மாநிலத்தைப் பிரிக்க வேண்டும் என்று கோரிக்கை 60 -களிலேயே வரத் தொடங்கி விட்டது. தெலுங்கு பேசும் மக்களுக்கு தனி மாநிலம் வேண்டுமென்ற ஆந்திரர்களின் கோரிக்கையை காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக்கொண்டனர். இதுதான் மொழி அடிப்படையில் மாநிலங்களை உருவாக்கும் பெரிய ஆவலை தூண்டிவிட்டது. இதனை தொடர்ந்து தான் மத்திய அரசுக்கு எல்லா பிரச்சனைக்கும் தீர்வு தெரியும் மத்திய அரசு முடிவு எடுக்கும் என்பதை கேள்வி கேட்க தொடங்கினார்கள். பம்பாய் மாகாணத்தில் குஜராத் மொழிக்காரர்களுக்கும் மராட்டியர்களுக்கும் நாளுக்கு நாள் இடைவெளி அதிகமாகிக் கொண்டே வந்தது. இறுதியாக 1960-இல் பம்பாய் தலைநகரமாகக் கொண்டு மகாராஷ்டிரம் அகமதாபாத் தலைநகரமாகக் கொண்டு குஜராத் என்ற மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. பஞ்சாப் மாநிலத்தில் இந்தி பேசும் சீக்கியர் அல்லாத மக்கள் வசித்த பகுதிகளை தனியாகப் பிரித்து ஹரியானா என்ற மாநிலத்தை 1966-இல் உருவாக்கினார்கள். பிறகு வடகிழக்கு பகுதியில் அசாமில் இருந்து வெவ்வேறு மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அதன் பிறகு உத்திர பிரதேஷ், பீகார் போன்ற மாநிலங்களில் இருந்து உத்தரகாண்ட், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், இமாச்சலப் பிரதேஷ் மற்றும் அருணாச்சல பிரதேஷ் போன்ற மாநிலங்கள் பிரிந்தன. இந்தியாவில் பல்வேறுபட்ட மொழி பேசுபவர்கள் நிறைந்த ஒரு நாடு. பல்வேறு மொழி பேசும் மக்கள் இந்தியாவில் இருந்தாலும் இன்னும் நாம் கூட்டாட்சி முறையில் தான் ஆட்சி செய்கிறோம்..ஹிந்தி பேசாத மக்கள் இந்தி திணிப்பை அன்றும் சரி இன்றும் சரி விரும்பவில்லை.

உலகில் அதிக மொழிகள் பேசும் நாடுகளில் முதல் இடத்தில் இருப்பது இந்தியா தான். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு படி இந்தியாவில் பேசப்படும் முக்கிய மொழிகள் 123. சிறிய அளவில் பேசப்படும் மொழிகள் 19,500. இவை எல்லாமே இப்போது பேச்சு வழக்கில் இல்லை. நாம் இதுவரை 22 மொழிகளை அங்கீகரித்து இருக்கிறோம். இன்னும் 38 மொழிகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக நிலுவையில் இருக்கின்றது. இந்த 38 மொழியில் 11 மொழிகள் இந்தியில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. அதனால் தான் இந்தி பேசாத மக்கள் இந்தி ஒரு கலப்பின மொழி என்று சொல்வார்கள்.

போஜ்புரி என்ற ஒரு மொழி சுமார் 15 கோடி பேர் பேசுகிறார்கள். போஜ்புரி சினிமா தொலைக்காட்சி பத்திரிகைகள் எல்லாம் கூட வந்து விட்டன. உத்திரபிரதேசத்தில் பீகாரில் இப்போதும் போஜ்புரி பேசும் மக்கள் இப்போதும் நிறைய மக்கள் இருக்கிறார்கள். மொரிஷியஸ் நாட்டில் போஜ்புரி அங்கீகரிக்கப்பட்ட ஒரு மொழி. அங்கு இந்தியுடன் போஜ்புரி மொழியும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

மொழி மக்களின் உணர்வைத் தட்டி எழுப்பும் மொழியால் மக்களை ஒன்று திரட்ட முடியும் என்பதற்கு சரியான உதாரணம் பாகிஸ்தான். பாகிஸ்தானின் முதல் பிரதமர் முகமது அலி ஜின்னா பாகிஸ்தானுடன் இணைந்த வங்கதேசத்தை அன்றைய கிழக்கு பாகிஸ்தான் மக்களிடம் நீங்கள் வங்க மொழி பேச கூடாது உருது கற்றுக் கொள்ளுங்கள் என்றார். அப்போது ஏற்பட்ட எதிர்ப்பு தான் பின்னாளில் பங்களாதேஷ் உருவாக காரணமாக இருந்தது. மொழியை வைத்து ஒரு நாடு பிரிவினைக்கு தள்ளப்படும் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை.

மொழி மக்களிடையே பிரிவினையை விதைக்கவில்லை. பிறமொழி இன மக்களிடம் கலந்து பழகும் பண்பு இன்றும் தொடர்கிறது. வட இந்தியாவில் இருந்து வரும் பிறமொழி பேசும் குறிப்பாக இந்தி பேசும் பலருக்கு வாழ்வாதாரமே தமிழ்நாடு தான். மாதந்தோறும் அவர்கள் குடும்பத்தினருக்கு அனுப்பும் வங்கி பரிவர்த்தனை பத்தாயிரம் கோடியை தாண்டி இருக்கிறது. வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு என்பதற்கு இதைவிட உதாரணம் தேவை இல்லை. இதெல்லாம் பாரதிய ஜனதாவும் தெரிந்தும் தெரியாமல் இருப்பது போல் பாசாங்கு அரசியல் செய்கிறது. கூட்டாட்சி முறை நமக்கு அவசியம் என்பதற்கு காரணம் இந்தியாவில் பல்வேறு மக்கள் பல்வேறு மொழி கலாச்சாரம் என்ற வாழ்க்கை முறை தான்.

இந்தியாவில் உயர்கல்வி படிப்போர் எண்ணிக்கை 27 சதவீதம். ஆனால், மாநில அளவில் உயர்கல்வி படிப்போர் எண்ணிக்கை ஏற்றத்தாழ்வாகத்தான் இருக்கிறது. இந்தியாவிலேயே அதிக உயர்கல்வி படிக்கும் முதன்மை மாநிலமாக தமிழகம் இருக்கிறது. உயர்கல்வியில் தமிழ்நாடு 50 சதவீதத்தை தாண்டி இப்போது அதன் இலக்கு அமெரிக்காவுடன் போட்டி போடுகிறது உயர் கல்வி படித்தால் தனிநபர் வருமானம் அதிகரிக்கும் என்பதுதான் திராவிட மாடல் சித்தாந்தம். அதனால் தான் தளபதி அவர்கள் உயர்கல்வி படிப்போருக்கு பார்த்துப் பார்த்து சலுகைகளை வாரி வழங்குகிறார். உயர் கல்வியில் மிகவும் பின்தங்கிய மாநிலங்கள் என்று குறிப்பிட வேண்டும் என்றால் பீகார் மற்றும் உத்தர பிரதேசத்தை குறிப்பிட வேண்டும். இங்குதான் பாரதிய ஜனதா ஆட்சி நடைபெறுகிறது என்பதையும் நினைவுப் படுத்துகிறேன்.

சுதந்திர இந்தியாவில் முதல் 20, 25 ஆண்டுகள் பாராளுமன்ற நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் தான் இருந்தன. பாராளுமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்யும் கொள்கை குறிப்புகள் கூட ஆங்கிலத்தில் தான் இருந்தன. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை விவாதங்கள் ஆங்கிலத்தில் தான் நடந்தது. இன்னும் சொல்லப்போனால் ஹிந்தி பேசும் மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கூட பாராளுமன்ற விவாதங்களில் ஆங்கிலத்தில் தான் பேசியிருக்கிறார்கள். உண்மையில் இந்தி மொழிக்கு யாரும் எதிரியே இல்லை. தென்னிந்தியாவில் இந்தி பேசும் மக்கள் நிறைய பேர் தொழில் செய்கிறார்கள். அவர்களுக்கு இதுவரை எந்த அச்சுறுத்தலும் இல்லை. இதெல்லாம் தெரியாமல் பாஜக அரசு திணிப்புஎன்ற பெயரில் இந்தி மொழி மீது பிற மொழிக்காரர்கள் வெறுப்பு ஏற்படும் வகையில் பாஜகவின் நடவடிக்கை இருக்கிறது. இந்திக்கு இவர்கள் செய்யும் துரோகம் இதுதான்.

ஆனால் நமது முதல்வர் சாதனை முதல்வர் இது போன்ற இடர்பாடுகளை கண்டு கொள்ளாமல் சாதனை என்ற இலக்கை நோக்கி போய்க்கொண்டே இருக்கிறார். தமிழ்நாட்டின் வருமானம் ஒரு டிரில்லியன் இலக்கு என்று சொல்லி அந்த இலக்கை நோக்கி போய்க் கொண்டே இருக்கிறார். இப்படி பாஜக முதல்வர்கள் யாரும் சிந்திப்பதில்லை மதவாதம் என்ற சின்ன வட்டத்துக்குள் இப்போதும் சுழன்று கொண்டிருக்கும் இவர்களைப் பார்த்து நாம் பரிதாபம் தான் படுகிறோம். ஒன்றியம் என்பதற்கான விளக்கத்தை இவர்கள் தெரிந்து கொள்ளும் வரை இவர்கள் நடவடிக்கை பழைய பஞ்சாங்கம் ஆக தான் இருக்கும்.